*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# Social Perspectives in the Novel Thool

**K. Anbarasi*,**
Ph.D Research Scholar, Department of Tamil Studies,
Annamalai University, Annamalainagar - 608 002.
Email: kanbarasi1982@gmail.com
**Dr. S. Vanitha**,**
Research Guide, Assistant Professor, Department of Tamil Studies, Annamalai University,
Annamalainagar - 608 002.

**Abstract:**

In the contemporary era, often characterized as the age of science, society continues to grapple with deep-seated divisions based on caste, religion, language, and political power. These structures frequently subject marginalized individuals to states of suffering and exploitation. Many novelists utilize their literary works as a platform to highlight these societal maladies and foster public awareness.

This research paper analyzes D. Selvaraj's acclaimed novel, Thool. The study explores the social issues depicted in the narrative, specifically focusing on the hardships faced by the Dalit community and the multifaceted oppression of women. Furthermore, it examines the lived experiences of those relegated to the lower strata of society and critiques the overarching dominance and authority exercised by the capitalist class.

**Keywords** : *D. Selvaraj, Thool (Skin) Novel, Social Perspectives, Dalit Literature, Capitalist Oppression, Social Awareness, Women's Struggles*.

**References:**

1. Puliyur Kesikan. Purapporul Venba Maalai. p. 41.
2. Selvaraj, D. Thool. p. 97.
3. Selvaraj, D. Thool. p. 108.
4. Selvaraj, D. Thool. p. 21.
5. Selvaraj, D. Thool. p. 22.
6. Selvaraj, D. Thool. p. 248.
7. Thirukkural. Couplet 80.
8. Thirukkural. Couplet 82.
9. Selvaraj, D. Thool. p. 104.
10. Selvaraj, D. Thool.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM

# தோல் புதினத்தில் சமுதாய சிந்தனைகள்

* **கி. அன்பரசி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், செல்: 8508102464

****முனைவர் ச. வனிதா,** நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்-608 002.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இன்று இருபத்தி ஐந்தாம் நூற்றாண்டுநடைபெற்று வருகின்றது. இந்தக் காலம் கலியுகம் என்றும் அறிவியல் காலம் என்றும் அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் இச்சமுதாயத்தில் சாதி, மதம், மொழி எனவும் அரசியல், அதிகாரம் எனவும் வேறுபடுத்தி மக்களை துன்ப நிலைக்குத் தள்ளுகின்றனர். சமுதாய அவலங்களை பல நாவல் ஆசிரியர்கள் தங்களுடைய படைப்புகளில் தெளிவாக கதைக் களத்தைப் பயன்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் டி. செலவ்ராஜ் அவர்கள் தன் படைப்புகளில் ஒன்றான தோல் என்ற புதினத்தில் சமுதாய அவலங்களையும், மக்கள் படும் கொடுமைகளைக் குறிப்பாக தலித் மக்கள் படும் வேதனைகளையும் பெண்கள் படும் துன்பங்கள் பற்றியும் அவர்களின் வாழ்க்கை கீழ் நிலைக்குத் தள்ளப்படுவதையும் முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்தையும் ஆராய்கிறது.

**தோல் நாவல் அமைப்பு**

எழுத்தாளர் டி. செல்வராஜ் அவர்களால் 2010-ம் ஆண்டுஎழுதப்பட்ட ஒரு மாபெரும் படைப்பே தோல் நாவலாகும். இந்நாவலுக்கு 2011-ம் ஆண்டிற்கான ‘இலக்கிய விருது’, 2012-ஆம் ஆண்டிற்கான ‘சாகித்திய அகாதெமி’ விருது இந்நாவலுக்கு வழங்கப்பட்டது. இந்நாவல் 117 கதை மாந்தர்களைக் கொண்டு 26 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது தோல் நாவல். திண்டுக்கல் பகுதியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் அவல நிலையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.

**புதினமும் சமுதாயமும்**

புதினம் சமுதாயத்தோடு நெருங்கியத் தொடர்புடையது. மனித வாழ்க்கையின் மதிப்புகளை வெளியிடக்கூடிய மிகத் தொன்மையான எண்ணங்களை இலக்கியத்தில் வளர்த்திருப்பது புதினத்தின் பாங்காகும்.

**தீண்டாமை**

> “கல்தோன்றி மண்தோன்றா காலத்தே
>
> வாளோடு முன்தோன்றி மூத்தக்குடி”[1]

என்பது நமது தமிழ் குடியாகும். தமிழ் குடியின் பெருமைகள் என்றால் பண்பாடு மாறாமல் இருப்பது என நாம் வகுத்துக்கொண்ட கொள்கையாகும். பண்பாடும் பாரம்பரியமும் நிறைந்த மொழிகள் சங்க காலத்தில் சாதிய பாகுபாட்டில் சிக்கி இருந்தனர் என்று சொன்னால் அது உண்மையல்ல.

சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் நான்கு இனம் கடம்பன், துடியன், பறையன், பாணன் என்ற பகுதியாக காணப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் தலித்துக்கள் மீதான தாக்குதல் அதிகம் காணப்படுகின்றன. நாவலாசிரியரான டி. செல்வராஜ் அவர்களால் எழுதப்பெற்ற தோல் என்ற நாவலில்,

> “சாதியக் கொடுமை என்று தோல் புதினத்தில் வெட்டியான் தொழில் புரியும் காக்கையனின் பேத்தி இறந்துவிடுகிறாள். அச்சமயத்தில் மழை பொழிகின்றது. அம்மழையினால் ஊரணி நிரம்பியது. அதனால் இடுகாட்டிற்கு செல்ல முடியாமல் மேல் சாதிக்காரர்களின் தெரு வழியாக தூக்கிச் செல்ல முற்படுகின்றனர். சேரி மக்கள் அதற்கு மேல் சாதிக்காரர்கள் வழி மறிக்கவும் துணை ஆட்சியர் மற்றும் சங்கரனும் சமாதானம் பேசுகிறார்கள்”[2]

> “அதெப்படி தொரெ அதுகளா தீண்டப்படாத பறைச்சனங்க சேரிப் பொணம் மேலக்குடித் தெருவழியாப் போறது காலம் காலமா இல்லாத வழக்கம்”[3]

என மனக் காவலன் கூறினார் என்பதில் தாழ்த்தப்பட்டவர்களின் பிணம் மேல் சாதிக்காரர்களின் தெரு வழியாக செல்ல மறுத்தனர். மீறி சென்றால் அத்தெரு தீட்டுப் பட்டுவிடும். தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டப்படாதவர்கள் என்னும் எண்ணத்துடன் இழிவாக கூறியுள்ளதை படைப்பாசிரியரின் வழி காணலாகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த இந்தக் காலக் கட்டத்திலும் மேல்-கீழ் சாதி மக்கள் தீண்டாமையால் அல்லல்படுவதையும், அவ்வாறாக இன்றளவும் தீண்டாமைக் கொடுமைகள் பற்றியும் அதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் படும் துயரைப் பற்றியும் மிக தெளிவாகவும் உணர்ச்சிப் பெருக்கோடும் நுட்பமாக எடுத்துரைத்துள்ளார் படைப்பாசிரியர்.

**காதல்**

காதல் போயின் சாதல் என்பது பாரதியின் கூற்று. காதல் என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு. ஆண், பெண் இருவருக்கும் ஏற்படுகின்ற மனதின் அடிப்படையில் ஏற்படும் மாற்றம் என்றும் உணரலாம்.

> “வெளியில் சொல்ல முடியாத காதலாகப் பரிணமித்திருக்கிறது. அவர்களுள் கலந்து கொண்டிருக்கும் காதல் உணர்வை வெளிப்படையாகவே சொல்ல வேண்டி நேரம் வந்து விட்டதை உணர்ந்தான் ஓசேப்பு”

அதை,

> “ஒன்னைய மட்டும் தனியா வுட்டுட்டு நா மட்டும் ஊரை விட்டுப் போவ முடியாம மனம் ஒப்பாவ அருக்காணி...
>
> இப்படி அவன் சொன்னபோது அதீதமான உணர்ச்சியாலும் மகிழ்ச்சியாலும் அவளை அறியாமலேயே பொலபொலவெனக் கண்ணீர் கொட்டியது...

நெசமாவா சொல்லுதே ஓசேப்பு நீ வேதக்காரன் நான் சேரிப் பறைச்சி நடக்குற காரியமா ஊரு ஒப்புமா”[4]

“அப்படி சொல்லாதே அருக்காணி. ஒழைச்சி வவுத்த கழுவுற நமக்குள்ள என்ன வித்தியாசம். எந்த சாமியாச்சும் வந்து நமக்குள்ள கல்யாணம் நடக்க வேண்டாண்டு தடுத்துச்சா அருக்காணி. நாம எல்லாரும் ஒருச்சான் வவுத்துக்கு வேண்டிய கை ஊண்டிக் கரணம் போட்டுக் காலத்த ஓட்டுறவுக”[5]

இவ்வாறாக அவ்விருவரும் பேசிய உரையாடலில் காதலுக்கு உள்ள கண்ணியத்தையும் காதலின் உண்மைத் தன்மையையும் மிக அழகாக வட்டார வழக்கின் வழியே எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர்.

**காவல் துறையினர் ஆதிக்கம்**

காவல்துறை என்பது அனைத்து தரப்பு மக்களையும் பாதுகாக்கும் ஒரு துறை. ஆனால் இன்றோ முதலாளிகளுக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் துணைபோகின்றது என்பதை ஆசிரியர் போக்கிரிகளுக்கு உதவி செய்யும் வகையில் போலீஸ்காரர்கள், கண்ணில் பட்ட ஆண்களையெல்லாம் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து வைத்திருப்பதுடன் அடியாட்களின் அடாவடித் தனத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறது. மேலும் இருதயச்சாமியை நையப்புடைத்து அவமானப்படுத்திய போலீஸ் வண்டியில் ஏற்ற வேண்டும் என்று திட்டமிட்டிருந்ததால் அதற்கான பணமும் அவனிடம் தரப்பட்டிருந்தது.

மேலும் வேலாயுதம் என்ற காங்கிரஸ் காரரிடமும் தன் கோபத்தை,

“ராஸ்கல் படவா எந்திரிடா கிரிமினல் பயலுக்கு நாற்காலி வேற கேக்குதோ... ஓங்கிய வண்ணம் பாய்ந்தான்”[6]

இவ்வாறாக காவல்துறையின் ஒருதலைப்பட்ச நடவடிக்கையை மிக சாதுரியமாக எடுத்துக் கூறியுள்ளார்.

**அரசியல்வாதிகளின் போலித்தனம்**

அரசியல் என்பது முக்கியமான ஒன்றாகும். அதனால்தான் என்னவோ அரசியல் பற்றி ஒரு தனி அதிகாரமே படைத்துள்ளார். அதில் அரசியல்வாதிகள் நேர்மை, ஒழுக்கம், நீதி தவறாமை ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும். அது தலைகீழாக பின்வருமாறு செய்திகள் விளக்குகிறார்.

“காட்சிக்குத் எளியின் கடுஞ்சொல்லால் அல்லனேல்
மீன்கூறும் மன்னன் நிலம்”

என்றில்லாமல் எப்பொழுதும் படாகோபம் முகஸ்துதி போன்ற போலித் தனத்தோடு மக்களை பழித்துக்கொண்டு இருக்கும் அரசியல் தலைவர்களை இன்று கடவுளாக பாவித்துக் கொள்கின்றனர். அரசியல் துறையில் நல்ல தலைவன் என்பவன் நல்ல அமைச்சர்கள் நல்ல மக்கள் சிறந்த பொருள் வளம், தேவையான அரண், நுட்பமான போர்படையோடு நட்புப் பரவலாகும், குணம் உடையவராக இருக்க

வேண்டும். மேலும் அவன் இயல்பாகவே அஞ்சாமல் கொடுக்கும் அறிவூக்கம் கொண்டவனாக இருக்க வேண்டும்.

“அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர் இயல்பு”[7]

என்னும் திருக்குறள் வழியே தலைவன் இயல்பானவன் என்று காட்டுகிறார் நாவன்னா, மூவன்னா என்றழைக்கப்படும் நாராயண மூர்த்திப் பிள்ளை.

“தனது தொழில்களையும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் தன் பெயரிலும் குவித்து வைத்திருக்கும் செல்வத்தை பூதம் காப்பது போல் காப்பாற்றிக் கொள்வதற்கு கதர் புனைந்து காங்கிரஸ் கட்சி பிரமுகர் ஆனார்”

மேலும் அரசியல்வாதிகள் கட்சிக்கு இடம் தரவுதலை பற்றிக் கூறுகையில், நகரின் பிரபல தோல் ஷாப்பு, ஹாஜியார் அஸன் முகமது மேடைக்கு அழைக்கப்பட்ட கூட்டத்தில் நின்ற ஒருவர்,

“இவன் யார் தெரியுமா இவன் நேத்து வரையிலே முஸ்லீம் லீக் கட்சிக்குத் தலைவன் முகமது அலி ஜின்னாவோடு கட்சிக்கு தூண் மாதிரி சட்டையை மாத்திக்கிற மாதிரி கட்சியை மாத்திக்கிராங்க. வெக்கம் நாணம் மானம் இல்லாத பயவளும் அவனுவளைச் சேத்துக்கிராங்களே”

என்று அங்கலாயித்துக் கொண்டான்.

இவ்வாறாக அரசியல்வாதிகள் நாட்டைக் காக்கும் தகுதியை இழந்தவர்களாகவும் மக்களை ஏமாற்றுபவர்களாகவும் தம் ஆடைகளை கழற்றி மாற்றுவது போல் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மாற்றிக் கொள்வதை மிகத் தெளிவாக எள்ளி நகையாடுகின்றார்.

**கல்வி**

“கேடில் விழுச்செலவ்ம் கல்வி ஒருவற்கு

மாடுஅல்ல மற்றை யவை”[8]

கல்வி என்பது சேவையாக அனைவருக்கும் சென்றடைய வேண்டும். ஆனால் இன்றோ கல்வி என்பது ஒரு வியாபாரமாக விலைபேசிக் கொண்டிருக்கும் அவல நிலைக்கு உந்தப்பட்டுள்ளது. மேலும் மேல்தட்டு மக்களின் அடக்குமுறையால் அடித்தட்டு மக்களுக்கு கல்வி கிடைப்பதில்லை மற்றும் பொருளாதார அடிப்படையில் அவர்களுக்கு கல்வி பெரும் தடையாக உள்ளது. இதனை ஆசிரியர் ஆசீர்வாதம் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் அவனுடைய மனைவியின் ஈமச் சடங்கிற்காக தோல் ஷாப்பு முதலாளியிடம் பணம் கேட்டு செல்லும் போது தன் மகன் ஓசேப்பையும் கூட அழைத்துச் செல்வான். ஓசேப்புக்கு அப்பொழுது பள்ளிக்கச் செல்லும் வயது இருந்தும் பள்ளிக்கு அனுப்பாமல் தன்னுடன் தோல் ஷாப்புக்கு அழைத்து செல்வதையும் அதனை ஷாப் உரிமையாளர் கேட்பதாக அமைந்துள்ளதை,

“பய என்னடா செய்யறான் எங்காச்சும் டீக்கடையிலே நிறுத்தி வச்சிருக்கையா?”

என்று மிகவும் அக்கறை பட்டவர்போல கேட்கவும் அஸன் ராவுத்தரின் உள்ளக் கிடக்கையை அறிந்திராத ஆசீர்வாதம்,

> "சும்மாதான் இருக்கான் முதலாளி பங்குச் சாமியார் நடத்திற பள்ளிக்கோடத்துக்குப் போயிட்டு வாரான். ஏதோ நாலு எழுத்து படிச்சா நம்மளாட்டம் நொம்பலப்பட வேண்டாம் பாருங்க"[9]

என்று அப்பாவியாகச் சொன்னான்.

மேலும் தாழ்த்தப்பட்டவன் பள்ளிக்கூடம் செல்லக்கூடாது என்று உடல் உழைப்பு மட்டுமே அவர்களுக்கான உடைமை என்று அவர் கூறினார்.

இவ்வாறாக அடித்தட்டு மக்களின் கல்வியை பொருளாதாரமும், அவர்களது வறுமையும் தீர்மானிக்கப்படுகிறது. மேலும் இன்று கல்விக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்தாலும் தாழ்த்தப்பட்டோர் பிள்ளைகளின் கல்வியை அவர்களது வறுமை தீர்மானிக்கப்படுகிறது என்பதை தெளிவாக எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.[10]

**முடிவுரை**

தோல் நாவல் பல்வேறு சமுதாய கூறுகளை அலசுகின்றது. சமுதாயத்தில் நிகழும் பல உண்மைகளைத் தம் புதினத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் வாயிலாக ஆசிரியர் அப்பட்டமாக்குகிறார். காலம் காலமாக நிகழ்ந்த தீண்டாமைக் கொடுமைகள் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்னும் ஏற்றத் தாழ்வுகள் முதலாளி வர்க்கத்தாலும், அரசியல் வாதிகளாலும் உண்டாகும் அடிமைத் தனம் போன்றவை இக்கட்டுரையில் ஆராயப்பட்டது. மேலும் போலித்தனமாக அரசியல்வாதிகளின் போக்கையும், காவல் துறையின் ஒருதலைபட்ச செயல்பாடுகளையும் இப்புதினம் சாடுவதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. புலியூர்க்கேசிகன், புறப்பொருள் வெண்பாமாலை, ப. 41.
2. டி. செல்வராஜ், தோல், ப. 97.
3. மேலது., ப. 108.
4. மேலது., ப. 21.
5. மேலது., ப. 22.
6. மேலது., ப. 248.
7. திருக்குறள். 80.
8. மேலது., 82.
9. டி. செல்வராஜ், தோல், ப. 104.
10. மேலது., ப.

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.



KALANJIYAM